**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, NANGUNERI.**

**A.S.No. 29/2023**

Parvathi (died) and 4 others ..........Appellants/ Defendants

//Vs//

Gurusankaranarayanan and 1 another .......Respondents/Plaintiffs

**VALUATION SLIP**

| Section and Sub-Section of CF Act | Nature of Suit | Market Value | Court Fee |
|---|---|---|---|
| Sec. 27(c) and 52(1) | Injunction | Rs. 1,000/- | Rs.75.50/- |

By Order

Shrisdadhar

**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.B.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 07 ம் நாள் செவ்வாய்கிழமை

**மேல்முறையீட்டு வழக்கு எண்.29/2023**

**(வள்ளியூர் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.66/2014)**

**(CNR NO.TN TL27-000619-2023)**

1. நான்குநேரி தாலுகா, இராமகிருஷ்ணாபுரம் கிராமம், இராமகிருஷ்ணாபுரம் வடக்குத் தெருவில் வசிக்கும் கிருஷ்ணன் @ கிட்டு என்பவரின் மனைவி, இந்து, வயது 65 உள்ள லேட். C.பார்வதி.*

... மேல்முறையீட்டாளர்/ 1ம் பிரதிவாதி

2. திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, இராமகிருஷ்ணாபுரம் கிராமம், இராமகிருஷ்ணாபுரம் வடக்குத் தெரு, கதவு எண். 1/121 ல் வசிக்கும் கிருஷ்ணன் @ கிட்டு என்பவரின் மகன் வெள்ளப்பாண்டி.

3. திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, மூலைக்கரைப்பட்டி, அம்மன் கோவில் தெரு, கதவு எண். 119 ல் வசித்து வரும் சரவணன் என்பவரின் மனைவி கல்யாணி.

4. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, மீனவன்குளம் பகுதி- 2 கிராமம், பெருமாள்குளம், கதவு எண் 4/123 ல் வசித்து வரும் முருகன் என்பவரின் மனைவி லதா.

5. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, சவேரியார்புரம், அம்மன் கோவில் தெரு, கதவு எண் 5/298 ல் வசித்து வரும் முத்து என்பவரின் மனைவி அழகுரதி.

*(இ.ம.எண்.1/2026 ல் 02.07.2026 ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)

... 2 முதல் 5 மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, இராமகிருஷ்ணாபுரம் கிராமம், இராமகிருஷ்ணாபுரத்தில் வசித்து வந்து தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி, 2 வது கண்டொன்மென்ட், வில்லியம் ரோடு, கதவு எண்.50 என்ற முகவரியில் வசிக்கும் இராமகிருஷ்ணன் என்பவரின் குமாரர் 50 வயதுள்ள R. குரு சங்கரநாராயணன்.

... எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

நான்குநேரி தாலுகா, இராமகிருஷ்ணாபுரம் கிராமம், இராமகிருஷ்ணாபுரம் வடக்குத் தெருவில் வசிக்கும் கிட்டு என்பவரின் மகன், இந்து, வயது 27 உள்ள K.பாண்டி.

... எதிர்மேல்முறையீட்டாளர்/2 ம் பிரதிவாதி

இந்த மேல்முறையீடானது, நாங்குநேரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.249/2009 ல், 05.06.2014 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>விசாரணை நீதிமன்ற தரப்பினர் விவரம்</u>**

R. குரு சங்கரநாராயணன் ... வாதி

// எதிர் //

1. C. பார்வதி
2. K. பாண்டி ...பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| மேல்முறையீடு தாக்கலான நாள் | : | 11.08.2014, 21.08.2014 (வள்ளியூர் சார்பு நீதிமன்றம்) |
| கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 13.08.2014 (வள்ளியூர் சார்பு நீதிமன்றம்) |
| விசாரணை நீதிமன்றத்தில் கோரிய பரிகாரத்தின் மதிப்பு | : | ரூ.1,000/- |
| மேல்முறையீட்டில் கோரிய பரிகாரத்தின் மதிப்பு | : | ரூ.1,000/- |

தாவா பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டப்பிரிவு 27(சி) மற்றும் 52(1)ன் படி **ரூ.75.50**/- நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கானது, முதலில் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் மே.வ.எண்.66/2014 என தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்னர், மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் மே.வ.எண்.29/2023 என எண்ணிடப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கானது, என் முன்பு இறுதியாக 06.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது, மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. டைட்டஸ் ஏனோக் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.S. ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாத உரைகளைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், இதுநாள்வரை என் ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ....

## தீர்ப்பாணை

1. மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.
2. அசல் வழக்கு எண்.249/2009ல் நான்குநேரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 05.06.2014ம் தேதியில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.
3. செலவுத் தொகை இல்லை என ஆணையிடப்படுகிறது.

**செலவு விபரப்பட்டியல்**

| வ.எண். | தன்மை | வாதி தரப்பு ரூ. பை. | பிரதிவாதி தரப்பு ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | நீதிமன்ற முத்திரை கட்டணம் | ரூ.75.50/- | - |
| 2. | வக்காலத்து | ரூ. 10.00/- | ரூ.10/- |
| 3. | டைப்பிங் சார்ஜ் | - | ரூ.200/- |
| 4. | முதுநிலை வழக்கறிஞர் ஊதியம் | - | ரூ.10,000/- |
| 5. | இளநிலை வழக்கறிஞர் ஊதியம் | - | ரூ.5,000/- |
| | மொத்தம் | ரூ.85.50/- | ரூ.15,210 |

( வாதி தரப்பில் செலவு தொகை தாக்கல் இல்லை. வாதி தரப்பு செலவு தொகை 96 CRP படி கணக்கிடப்பட்டுள்ளது)

**தபசில் விபரம்**

திருநெல்வேலி டி.ஐ.மூலைக்கரைப்பட்டி, இராமகிருஷ்ணாபுரம் கிராமம், பெரியகுளம் புறவில் அயன் நஞ்சை சர்வே எண்

ஊக்கா செண்ட்:

126 ல் 0.24
127 ல் 0.24
128/2 ல் 0.25
141/1 ல் 0.26 இ பிரிவின்றி செண்டு 24 ம்
141/2 ல் 0.50
147/2 ல் 00.25

ஆக மொத்தம் ஏக்கர் 1 செண்டு 72 பூராவும்.

141/1ல் உள்ள கிணறு பிரிவின்றி பாதி

141/1ல் உள்ள 3 எச்.பி. பம்பு செட்டு பூராவும்

141/1ல் உள்ள ரூம் பூராவும்

141/1ல் உள்ள கிணறு பாதி சென்டு 1

மின்சார இணைப்பு எண். 22, ஷை நிலத்திற்குண்டான குளத்து தண்ணீரில் விகிதமும் தபசில் விபரம் சரி.

2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 07-ம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்.P.S.ரஷ்கின் ராஜ்

சார்பு நீதிபதி,

நான்குநேரி

**நகல்**: மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நான்குநேரி,

மே.மு.வ.எண்.29/2023

தீர்ப்பாணை

நாள் - 07.072026